மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியைப் பொறுத்தவரையில் இப்போது அந்த மருத்துவமனையில், உள்நோயாளிகளுடைய எண்ணிக்கையும், வெளிநோயாளிகளுடைய எண்ணிக்கையும் கூடியிருக்கிறது என்பது உண்மைதான். எப்போதும் இருக்கிற ஒரு மருத்துவமனைக்கு கூடுதலான படுக்கை வசதியை அதிகரிக்க வேண்டுமென்று சொன்னால், அங்கே வருகிற நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்பதான் படுக்கை வசதிகள், கூடுதல் கட்டடங்கள் எல்லாம் கட்ட அரசு திட்டமிடுகிறது. எனவே, அந்த வகையில் முதல் கட்டமாக, திருத்துறைப்பூண்டிக்கு இப்போது வெளிநோயாளிகளுக்கான பிரிவு ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. எனவே, உள்நோயாளிகளுடைய எண்ணிக்கையும் கூடியிருப்பதால், அங்கே கூடுதல் படுக்கை வசதி கொண்ட ஒரு பகுதியை கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளது. அதையும் விரைவுபடுத்தி அங்கேயுள்ள நோயாளிகளுக்கான புதிய படுக்கை வசதிகளைக் கொண்ட கட்டடத்தை கட்டுவதற்கு இந்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 89, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

89-

பேருந்து வசதி

***641—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் தொகுதி, முதலியார் ஏரி, கதிர்குளம், கே. வலசை, அருகவாய்ப்பள்ளி, பூரகமானபள்ளி, கொச்சாலூர், புட்டவாரிபள்ளி, ஆர். வெங்கடாபுரம் போன்ற கிராமங்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஊர்கள் அனைத்திற்கும் தற்போது பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, தற்போது அந்தப்

2001 செப்டம்பர் 13]

பகுதிகளுக்கு கூடுதல் பேருந்து வசதி தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

திருமதி சி.எம். சூரியகலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில் உள்ள மூல வினாவில் நான் குறிப்பிட்ட அந்த கிராமங்களுக்கு இதுவரை பேருந்து வசதிகளே கிடையாது. ஜனத்தொகை 2000 பேர் இருந்தும், சாலை வசதி இருந்தும், நகரப் பேருந்து இதுநாள் வரை இல்லை. பள்ளி மாணவர்களும், விவசாயிகளும் நீண்ட தூரம் நடந்து செல்லவேண்டிய அவல நிலையுள்ளது. அங்கு வசிக்கும் மக்கள் குடியாத்தம் வரவேண்டுமானால், சுமார் 5 கிலோமீட்டர் தூரம் நடந்து வரவேண்டியுள்ளது. ஆகையால், பள்ளி மாணவர்களும், விவசாயிகளும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மினி பஸ் வசதியை ஏற்படுத்தி தருவார்களா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல் இல்லாமல், குடியாத்தம் தொகுதி முதலியார் ஏரி, கதிர்குளம், கே. வலசை, அருகவாய்பள்ளி, கொச்சலூர், முட்டவாரிப்பள்ளி, ஆர். வெங்கடாபுரம் போன்ற கிராமங்கள் அனைத்தும் குடியாத்தம் to சித்தூர் செல்லும் வழியில் இருக்கின்ற காரணத்தாலும், பிரதானச் சாலையிலிருந்து 1 கிலோமீட்டர், 1.9 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள கிராமங்களாக உள்ளதாலும், வேலூர், தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் நகரப் பேருந்து தடங்களான ஜி.2, ஜி.2-ஏ, ஜி.25, புறநகரப் பேருந்து தடங்களான 186, 189 மூலமாக அக்கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், அதே வழித்தடத்தில் தனியார் மற்றும் ஆந்திர மாநில போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கிராமங்கள் கிருஷ்ணாபுரம்-குடியாத்தம் வழித்தடத்தில் பூர்வமானப்பள்ளிக்கட்டு ரோடிலேயிருந்து 1 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. வேலூர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் இயக்கும் ஜி.4 நகரப் பேருந்து வழித்தடத்தின் மூலம் கூட்டு ரோடு பகுதிலேயிருந்து பேருந்துகள் தினசரி ஆறு நடைகள் இயக்கப்படுகின்றன. கூட்டு ரோடிலேயிருந்து 1 கிலோமீட்டர் தொலைவிற்குள் உள்ள பூர்வமானப்பள்ளிக்கட்டு கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகக் கருதப்படுகிறது. எனவே, மேற்கூறப்பட்ட

கிராமங்களுக்குத் தனியாகப் பேருந்து வசதி செய்யத் தேவையில்லை. அவ்வாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களேயானால் அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) குறுகிய கால வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 6, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

6—

குடியிருப்புகள்

13988—திரு. பி.கே. சேகர்பாபு:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டம், தண்டையார்பேட்டை பாரதி நகரில் 552 குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டு, கைவிடப்பட்ட இடத்தில் சாலையோரங்களில் வசிக்கும் மக்களுக்காக அக்குடியிருப்புகளைக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டத்தில் பாரதி நகர் என்ற பகுதியில் சாலையோரங்களில் வசிக்கின்ற மக்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கலாம் என 1995 ஆம் ஆண்டு ஏழைகளின் காவலராக விளங்கும் மாண்புமிகு மனிதப் புனிதவதி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் சுமார் 552 பேர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க பரிந்துரை செய்யப்பட்டது. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS